என்பவரின் 16 வயதான மகன் திலீபன் தாமிரபரணி ஆற்று நீரில் மூழ்கி இறந்துவிட்டார் என்றும், அவரது குடும்பத்திற்கு உதவி நிதி வழங்க வேண்டுமென்றும் கேட்டுள்ளார். அந்தக் கோரிக்கையையும் ஏற்று, மறைந்த திலீபனின் தந்தை மைக்கேலுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் உதவியாக வழங்கப்படும்.

வேறு சில சட்டப் பேரவை உறுப்பினர்கள் கொடுத்த கோரிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைக்காகவும், நிருவாக நடவடிக்கைக்காகவும் பரிசீலனையிலே உள்ளன என்று அந்த உறுப்பினர்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விபத்தில் இறந்தவர்களுக்கும், மற்றுமுள்ள நிலையிலுள்ளவர்களுக்கும் கட்சி பாரபட்சம் இல்லாமல் பொது நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்கியதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. தகவல் கோரல்

(அ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் யோகா பயிற்சியைத் தொடர வேண்டுகோள்

திரு. ஜி.கே. மணி: வருமுன் காப்போம், நோயற்ற வாழ்வு, உடல் பருமன் பேராபத்து என்பதைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு யோகா பயிற்சி அளிக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்தேன். அதை ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நேற்றும், இன்றும் யோகா பயிற்சி அளித்திருக்கிறார்கள். பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். 25 பேர் பங்கேற்றது மகிழ்ச்சி என்று எல்லோரும் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வருகிற 14 ஆம் தேதி வரையிலே அந்த யோகா பயிற்சியைத் தொடர வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைக்கிறேன்.